TNRM110002072023



**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**முன்னிலை : திரு.C.மோகன்ராம், M.A. B.L.,**

**அமர்வு நீதிபதி,**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட சிறப்பு நீதிமன்றம், இராமநாதபுரம். (மு.கூ.பொ)**
**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**
**சிறப்பு அமர்வு வழக்கு எண்.14/2023**
**(C.N.R.No.TNRM11-000207-2023)**

**இளஞ்செம்பூர் காவல்நிலைய குற்ற எண்.62/2022**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>முதுகுளத்தூர் உட்கோட்டம்,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| எதிரியின் பெயர், வயது, தகப்பனார் பெயர் மற்றும் முகவரி | : | **மணி**, வயது 57/2022,<br>த/பெ. குழந்தைவேலு,<br>மேலத்தெரு,<br>மாரந்தை,<br>கடலாடி தாலுகா,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| Date of Occurrence | : | 16.12.2022 |
| Date of filing charge sheet | : | 27.01.2023 |
| Date of taken on file | : | 06.03.2023 |
| Date of first appearance of the accused | : | 18.04.2023 |
| Date of last hearing | : | 13.03.2026 |
| Closure of Trial | : | 02.02.2026 |
| Date when the defence argument was closed | : | 13.03.2026 |
| Date of Judgment | : | 17.03.2026 |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:16:41 +0530

TNRM110002072023



**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C.No. 814/2020/ RG/F1 (P.Dis.No. 36/2021) உத்தரவு மற்றும் Rule 106 Cr.R.P.–யின்படி**

**CASE SUMMARY:–**

| **S. No.** | **Description** | : | **Date** |
|---|---|---|---|
| i) | Date of remand of the accused : | : | Released on 20.01.2023 By Hon'ble Madurai Bench of Madras High Court, Madurai Crl.O.P(MD)No. 238 of 2023. In Crl.M.P.No.77/2023 dated 20.01.2023. |
| ii) | Date of the filing of the complaint/Final Report in the Court. | : | 10.04.2023 |
| iii) | Dare of committal of the case to this Court of Sessions | : | Nil |
| iv) | Date of questioning of the Accused u/s 228/ 240/ 246/ 251 of the Code of Criminal Procedure, 1973 as the case may be | : | 06.07.2023 |
| v) | Filing of the miscellaneous petitions including the results on challenge before Superior Courts, except routine petitions u/s 317 of the Code. | : | NIL |
| vi) | Date of examination in chief and cross examination of witnesses. | : | (see below) |

| Witnesses | Chief Examination | Cross Examination |
|---|---|---|
| P.W.1 | 23.07.2025 | 23.07.2025 |
| P.W.2 | 23.07.2025 | 23.07.2025 |
| P.W.3 | 21.08.2025 | 21.08.2025 |
| P.W.4 | 21.08.2025 | 21.08.2025 |
| P.W.5 | 29.12.2025 | 29.12.2025 |
| P.W.6 | 29.12.2025 | 29.12.2025 |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:16:46 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | P.W.7 | 02.02.2026 | 02.02.2026 |
| | | | P.W.8 | 02.02.2026 | 02.02.2026 |
| vii) | Date of enquiry of the accused u/s 313(1) (b) of Cr.P.C. | : | 07.03.2026 | | |
| viii) | Details of absconding of the accused and his appearance/production, as the case may be: | : | <u>Abscondance</u><br>-- | <u>Production</u><br>--- | |
| ix) | Grant of stay by superior courts and the results thereof: | : | NIL | | |
| **வனையப்பட்ட குற்றச்சாட்டு** | | | | | |
| **1 வது குற்றச்சாட்டு** | | : | எதிரி புகார்தாரரின் முதுகில் கையால் அடித்து சாதாரணக் காயங்களை ஏற்படுத்தியதாக இதச பிரிவு 323 உ/இ பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015, பிரிவு 3(2)(va)) –ன் கீழான குற்றச்சாட்டு. | | |
| **2 வது குற்றச்சாட்டு** | | : | எதிரி புகார்தாரரைப் பார்த்து சாதியைச் சொல்லி திட்டி அவமானப்படுத்திய குற்றத்திற்காக பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015, பிரிவு 3(1)(r)(s)–ன் கீழான குற்றச்சாட்டு. | | |
| **எதிரியின் பதில்** | | : | குற்றவாளி அல்ல | | |
| **நீதிபதியின் தீர்மானம** | | : | குற்றவாளி அல்ல | | |
| **தீர்ப்பின் முடிவு** | | : | இறுதியாக, எதிரி மீது இதச பிரிவு 323 உ/இ பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015, பிரிவு 3(2)(va) மற்றும் பிரிவு 3(1)(r)(s) பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015–ன் கீழ் இவ்வழக்கில் | | |

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.17 18:16:51 +0530

| | | |
|---|---|---|
| | | குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே மேற்படி எதிரியைக் குவிமுச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் சொத்துகள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.<br><br>எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரத்தை ரத்து செய்தும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 13.03.2026–அன்று என் முன்னர் முடிவான விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு குற்றமுறையிடுபவரான அரசு தரப்பில் கற்றறிந்த சிறப்பு அரசு வழக்கறிஞர் திரு.V.T.ராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.NCM.பிரபாகரன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, முன்னிடப்பட்ட சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

**குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம்** :–

இவ்வழக்கின் புகார்தாரரான கர்ணன், இராமநாதபுரம் மாவட்டம், மாராந்தை கிராமத்தில் வசித்து வரும் இந்து பள்ளன் வகுப்பை சார்ந்தவர். எதிரி கோவிந்தமங்களம் கிராமத்தில் வசித்து வரும் பிற்படுத்தப்பட்ட இந்து மறவர் வகுப்பைச் சார்ந்தவர். கடந்த 16.12.2022ம் தேதி மாலை 06.30 மணியளவில் புகார்தாரரான கர்ணன் என்பவர் அவரது பைக்கில் ஒரு உரமூடையுடன் வந்து

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:16:55 +0530

பைக்கை மேலத்தெருவில் உள்ள சிவனாண்டி என்பவரது புரோட்டா கடை முன்பாக நிறுத்தி, மேற்படி கடையில் தோசை வாங்குவதற்காக நின்றுள்ளபோது, மேற்படி கடையின் முன்பு உள்ள வீட்டில் வசித்து வரும் எதிரியான மணி என்பவரது மகள் உமாதேவி தண்ணி வண்டியில் தண்ணீர் எடுத்து வந்துள்ளார். எதிரி புகார்தாரரைப் பார்த்து பைக்கை ஓரமாக நிறுத்த வேண்டியது தானே இப்படி நடுரோட்டில் நிறுத்தினால் பொம்பள பிள்ளை எப்படி போகும் என்று கேட்டுள்ளார். அப்போது புகார்தாரர் போனில் பேசியவாறே பைக்கை எடுத்தபோது பைக்கில் இருந்த உரமூடையுடன் பைக்கும் கீழே விழுந்து விட்டது. உடனே புகார்தாரர் எதிரி மணியைப் பார்த்து "ஏன் இப்படி அவசரப்படுத்துகிறீங்க" என கேட்டபோது, எதிரி மணி புகார்தாரர் கர்ணனைப் பார்த்து "ஏன்டா பள்ளப்பயலே எங்கிருந்து வந்து பைக்கை நடுநோட்டில் நிப்பாட்டி இருக்க" என்று சொல்லி, எதிரி தனது கையால் புகார்தாரரின் சாதிப் பெயரைச் சொல்லி திட்டி முதுகில் அடித்து சாதாரணக் காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாக கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் புலன்விசாரணை மேற்கொண்டு முதுகுளத்தூர் உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரியின் இத்தகைய குற்றச் செய்கைகளானது எதிரி மீது இதச பிரிவுகள் 323 உ/இ பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம், பிரிவுகள் 3(1)(r), 3(1)(s)-ன் கீழ் குற்றமாகும் என்று இளஞ்செம்பூர் காவல் நிலையத்திற்காக, முதுகுளத்தூர் உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. பின்னர், எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான நிலையில், அவருக்கு இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன. அதன் பின்னர் எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனைய முதல்நிலை நோக்கு காணப்பட்டதால், எதிரி மீது இதச பிரிவு 323 உ/இ பட்டிலியனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:17:02 +0530

தடுப்பு) சட்டம் 2015, பிரிவு 3(2)(va) மற்றும் பிரிவு 3(1)(r)(s) பட்டிலியனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு தமிழில் விளக்கி வினவியபோது எதிரி குற்றச்சாட்டுக்களைப் பொய் என மறுத்தார்.

**3.** அதன் பிறகு இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டைப் பொறுத்து அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்றுபொருள் குறியீடு செய்யப்படவில்லை.

4. **அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு :–**

(i) அ.சா.1 திரு.கர்ணன் மேலும் தனது சாட்சியத்தில் தான் கடலாடி தாலுகா மாரந்தை கிராமத்தில் வசித்து விவசாயம் தொழில் செய்து வருகிறதாகவும், சாட்சிகள் சிவனான்டி, முத்துப்பாண்டி, சக்திவேல் ஆகியோர்களை தெரியும் என்றும், எதிரியை தெரியும் என்றும், அவர் தன் ஊர்க்காரர் என்றும், தான் இந்து பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர் என்றும், எதிரி இந்து மறவர் சமூகத்தை சார்ந்தவர் என்றும், சாட்சி தேவி தன் மனைவி என்றும், , சாட்சி கவிதா தன் அக்கா என்றும், சாட்சி பிச்சை பாண்டி தன் தம்பி என்றும், எதிரி மீது தான் புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன் கையெழுத்துதான் என்றும், அந்த புகார் தான் கொடுத்தது தான் என்றும், அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** என்றும், கடந்த 16.12.2021 ம் தேதி மாலை 6.30 மணியளவில் தான் சவேரியார் பட்டிணம் சென்று உரமூடை பைக்கில் ஏற்றிகொண்டு வந்ததாகவும், மாரந்தையில் உள்ள சிவனான்டி ஹோட்டல் முன்பு தன் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு தோசை வாங்க சென்றதாகவும், அப்போது எதிரி மணி அவரது மனைவி ராமு, மகன் திருமுருகன் ஆகிய மூவரும் "என்னடா பள்ளப்பயலே உனக்கு என்னடா இங்கு

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:17:06 +0530

வேலை, இங்கு வந்து பைக்கை நிறுத்துகிறாய்" என பேசி தன்னை அடித்தார்கள் என்றும், தான் பைக்கை எடுத்துகொள்கிறேன் என்று சொன்னதாகவும், வேகமா எட்றா பள்ளப்பயலே என்று சொல்லி தன்னை பிடித்து இழுத்து தரதரவென இழுத்தார்கள் என்றும், தன் பனியன் கிழிந்துவிட்டதாகவும், 1ம் எதிரி மணிதான் அவ்வாறு இழுத்தார் என்றும், மணி தன்னை இழுக்கும்போது அவரின் மனைவி ராமுவும், மகன் திருமுருகனும் தன்னை அடித்தார்கள் என்றும், தன்னை எதிரிகளிடம் இருந்து சிவனான்டியும் முத்துப்பாண்டியும் விலக்கி இழுத்து சென்றார்கள் என்றும், அதன்பிறகு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், தான் வேறெங்கும் செல்லவில்லை என்றும், மறுநாள் காலை மாரந்தையில் வைத்து தன்னை டிஎஸ்பி விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திரு.சிவனான்டி, அ.சா.3 திரு.சக்திவேல், அ.சா.4 திரு.கோவிந்தராஜ் ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் அ.சா.1 எதிரிமீது கொடுத்த புகார் சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

(iii) அ.சா.5 திருமதி.கவிதா தனது சாட்சியத்தில் அ.சா.1 தன் உடன் பிறந்த தம்பி என்றும், சாட்சிகள் சிவனாண்டி, முத்துப்பாண்டி, சக்திவேல் ஆகியோர்களை தெரியும் என்றும், உள்ளுர்காரர்கள் என்றும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தான் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும், எதிரி சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும், கடந்த 16.12.2022ம் தேதி தன் தம்பி உரமூட்டை வாங்கிக்கொண்டு தங்கள் ஊரில் உள்ள சிவனாண்டி புரோட்டா கடையில் மாலை 6.30 மணியளவில் நின்று கொண்டிருந்துள்ளான் என்றும், அப்போது சிவனாண்டி புரோட்டா கடைக்கு எதிரே வசிக்கும் எதிரி தன் வீட்டு முன்பு எப்படிடா பைக்கை நிறுத்தலாம் பள்ளப்பயலே என்று சொல்லி தள்ளிவிட்டு தன் தம்பியை அடித்துவிட்டதாக தன் தம்பி அழுதுகொண்டு தன் வீட்டிற்கு வந்து சொன்னான் என்றும், தானும் தன்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:17:11 +0530

உடன்பிறந்தவர்களான பிச்சைப்பாண்டி, கனகவள்ளி ஆகிய மூவரும் எதிரியிடம் சென்று ஏன் தன் தம்பியை அடித்தீர்கள் என கேட்டோம் என்றும், அதற்கு எதிரி தான் அப்படித்தான் அடிப்பேன் ஏன் உன் தம்பி தன் வீட்டு முன்பு பைக்கை நிறுத்தினான் என்று தங்களையும் பேசியதாகவும், அதன்பிறகு தாங்கள் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம் என்றும், தன் தம்பி கர்ணன் புகார் கொடுத்ததாகவும், இதுசம்பந்தமாக டிஎஸ்பி தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அ.சா.6 திரு.பிச்சைப்பாண்டி தனது சாட்சியத்தில் அ.சா.1 கர்ணன் தன் உடன் பிறந்த அண்ணன் என்றும், கடந்த 16.12.2022ம் தேதி மாலை 6.00மணியளவில் நான், தன் அண்ணன் மனைவி தேவி வீட்டில் இருந்தோம் என்றும், தன் அண்ணன் உரமூட்டை வாங்கிக்கொண்டு தங்கள் ஊரில் உள்ள சிவனாண்டி புரோட்டா கடையில் மாலை 6.30மணியளவில் நின்று கொண்டிருந்துள்ளார் என்றும், அப்போது சிவனாண்டி புரோட்டா கடைக்கு எதிரே வசிக்கும் எதிரி தன் வீட்டு முன்பு எப்படிடா பைக்கை நிறுத்தலாம் பள்ளப்பயலே என்று சொல்லி தள்ளிவிட்டு தன் அண்ணனை வித்தியாசமாக பேசியுள்ளார் என்றும், தன் அண்ணன் அழுதுகொண்டு தன் வீட்டிற்கு வந்து நடந்த விவரத்தை சொன்னதாகவும், தானும் தன் உடன்பிறந்தவர்களான தன் அக்கா கவிதா, அண்ணன் கர்ணன், அண்ணி தேவி, மற்றொரு அக்கா கனகவள்ளி ஆகியோர் எதிரியிடம் சென்று ஏன் தன் அண்ணனை தள்ளிவிட்டீர்கள் என கேட்டோம் என்றும், அதற்கு எதிரி மற்றும் எதிரியின் மனைவி மற்றும் மகன் திருமுருகன் "நாங்கள் அப்படித்தாண்டா அடிப்போம், ஏன் உன் அண்ணன் எங்கள் வீட்டு முன்பு பைக்கை நிறுத்தினான்" என்று தங்களையும் "என்னடா பள்ளப்பயல்களா, என்னடா செய்வீர்கள்" என்று பேசினார்கள் என்றும், அதன்பிறகு தாங்கள் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம் என்றும், தன் அண்ணன் கர்ணன் புகார் கொடுத்ததாகவும், இதுசம்பந்தமாக டிஎஸ்பி தன்னை

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.17 18:17:16 +0530

விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அ.சா.7 திரு.பாண்டி, சிறப்பு சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில் தான் தற்போது முதுகுளத்தூர் உட்கோட்டத்திற்குட்பட்ட பேரையூர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறதாகவும், கடந்த 17.12.2022 ம் தேதி இளம்செம்பூர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பொறுப்பில் பணியில் இருந்தபோது 16.12.2022 ம் தேதி இரவு சுமார் 19.45 மணிக்கு கடலாடி தாலுகா மாரந்தை கிராமத்தை சேர்ந்த கருப்பையா மகன் கர்ணன் என்பவர் நிலையத்தில் நிலைய பொறுபபில் இருந்த தலைமை காவலர் 1597 திரு.சேதுபதி என்பவரிடம் கொடுத்த புகார் மனுவை அவர் பெற்று மனு எண்.182/2022 என பதிவு செய்து கொடுத்திருந்ததை தான் பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய கு.எண். 62/2022 சட்டப்பிரிவுகள் 323 IPC and sec 3(1)(r),3 (1)(s) of SC/ST (POA) Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை இந்நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட காவல் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்ததாகவும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** என்றும், இதுசம்பந்தமாக காவல் துணைக் கண்காணிப்பாளர் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) அ.சா.8 திரு.சின்னக்கண்ணு, காவல் துணைக் கண்காணிப்பாளர் தனது சாட்சியத்தில் தான் கடந்த 31.01.2025 ம் தேதி முதுகுளத்தூர் உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று மதுரையில் வசித்து வருகிறதாகவும், கடந்த 17.12.2022 ம் தேதி இராமநாதபுரம் மாவட்ட முதுகுளத்தூர் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது இளம்செம்பூர் காவல்நிலைய கு.எண்.62/2022 சட்டப்பிரிவுகள் 323 IPC and sec 3(1)(r), 3(1)(s)of SC/ST (POA) Act ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கினை புலன் விசாரணை மேற்கொள்ள இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனது செயல்முறை ஆணை எண்.C.No. 53/SJ&HR/RMD/2022, Dated: 17.12.2022 ன்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:17:22 +0530

மூலம் புலன் விசாரணை அதிகாரியாக நியமித்ததாகவும், அந்த உத்தரவு **அ.சா.ஆ.4** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(vii) அ.சா.8 மேலும் தனது சாட்சியத்தில் தான் அன்றைய தினமே பகல் 12.00 மணியளவில் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இளம்செம்பூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட மாரந்தை கிராமத்தில் மேலத்தெருவில் உள்ள சிவனாண்டி புரோட்ட கடை முன்பு சென்று சாட்சிகள் கோவிந்தராஜ் மற்றும் திருமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் பார்வை மகசரில் கையெழுத்து பெற்றதாகவும், தான் தயார் செய்த பார்வை மகசர் **அ.சா.ஆ.5** என்றும், வரைபடம் **அ.சா.ஆ.6** என்றும், அன்றைய தினமே புகார் கொடுத்த சாட்சி கர்ணன் மற்றும் சம்பவத்தை பார்த்ததாக சொல்லப்பட்ட சாட்சிகள் சிவனாண்டி, முத்துப்பாண்டி, சக்திவேல் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான கோவிந்தராஜ், திருமூர்த்தி ஆகியோர்களையும் மற்றும் சம்பவம் பற்றி தெரிந்துகொண்ட புகார்தாரர் கர்ணனின் மனைவி தேவி மற்றும் சாட்சிகள் கவிதா, பிச்சைப்பாண்டி ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே புகார்தாரர் மற்றும் எதிரிக்கு சாதிசான்றிதழ் வழங்குமாறு கடலாடி வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாகவும், 30.12.2022 ம் தேதி புகார்தாரர் மற்றும் எதிரிக்கு சாதிச்சான்றிதழ் பெற்று வழங்கிய கடலாடி வட்டாட்சியர் மரகத மேரி அவர்களை விசாரித்து அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(viii) அ.சா.8 மேலும் தனது சாட்சியத்தில் வட்டாட்சியர் மரகத மேரி புகார்தாரர் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும், எதிரி சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும் சாதிச்சான்றிதழ் வழங்கியதாகவும், அவர் வழங்கிய சாதி குறித்த அறிக்கை **அ.சா.ஆ.7** என்றும், தனது விசாரணையில் புகார்தாரர் தன் புகாரில்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:17:27 +0530

கூறியுள்ளதுபோல் இராமு மற்றும் திருமுருகன் சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரியவந்ததால் மேற்படி நபர்களை வழக்கிலிருந்து நீக்கம் செய்து நீக்கல் அறிக்கை தயார் செய்ததாகவும், தான் தயார் செய்த எதிரி நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ.8** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(ix) அ.சா.8 மேலும் தனது சாட்சியத்தில் 27.01.2023 ம் தேதி புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த முதுகுளத்தூர் அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் சிந்து அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றதாகவும், அந்த காயச்சான்று **அ.சாஆ.9** என்றும், அதே தினம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆர் பாண்டி அவர்களை விசாரித்து தனது விசாரணையின் முடிவில் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 323 IPC and sec 3(1)(r),3(1)(s)of SC/ST (POA) Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**5.** அ.சா.8 உடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6.** அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் குவிமுச 313(1)(b) பிரிவின் கீழ் எதிரியிடம் வினவியபோது எதிரி மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் பொய்யான சாட்சிகள் அளித்துள்ளதாகவும் பொய்வழக்கு என்றும் எதிரி தரப்பில் சாட்சி இல்லை என்றும் தெரிவித்தார்.

**7.** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**8.** இவ்வழக்கில் புகார்மனு கொடுத்த கர்ணன் அரசு தரப்பு சாட்சி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 கர்ணன் தனது சாட்சியத்தில் இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்று சாட்சியமளித்துள்ளார். எதிரி பிற்படுத்தப்பட்ட இந்து மறவர் வகுப்பை சேர்ந்தவர். புகார்தாரரான அ.சா.1

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:17:32 +0530

கர்ணன் மற்றும் எதிரியின் சாதிகுறித்து எதிரி மறுக்கவில்லை. அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சாதிச்சான்று குறித்த அறிக்கையைப் பரிசிலிக்கையில் அரசு தரப்பில் கூறும், காயம்பட்ட நபரான கர்ணன் இந்து தேவேந்திரகுல வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர் என்பதும், எதிரி பிற்படுத்தப்பட்ட இந்து மறவர் வகுப்பைச் சேர்ந்தவர் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளதால் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் இவ்வழக்கை விசாரிக்க அதிகாரம் உள்ளது என முடிவு செய்கிறது.

9. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:-</u>

எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சியங்களின் மூலம் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்?

<u>தீர்வு -</u>

**10.** அரசு தரப்பில் எதிரி கடந்த 16.12.2022ம் தேதி மாலை 06.30 மணியளவில் அ.சா.1 கர்ணன் என்பவர் அவரது பைக்கில் ஒரு உரமூடையுடன் வந்து பைக்கை மேலத்தெருவில் உள்ள சிவனாண்டி என்பவரது புரோட்டா கடை முன்பாக நிறுத்தி, மேற்படி கடையில் தோசை வாங்குவதற்காக நின்றுள்ளபோது, மேற்படி கடையின் முன்பு உள்ள வீட்டில் வசித்து வரும் எதிரியான மணி என்பவரது மகள் உமாதேவி தண்ணி வண்டியில் தண்ணீர் எடுத்து வந்துள்ளார். எதிரி புகார்தாரரைப் பார்த்து "பைக்கை ஓரமாக நிறுத்த வேண்டியது தானே, இப்படி நடுரோட்டில் நிறுத்தினால் பொம்பள பிள்ளை எப்படி போகும்" என்று கேட்டுள்ளார். அப்போது புகார்தாரர் போனில் பேசியவாறே பைக்கை எடுத்தபோது பைக்கில் இருந்த உரமூடையுடன் பைக்கும் கீழே விழுந்து விட்டது. உடனே புகார்தாரர் எதிரி மணியைப் பார்த்து "ஏன் இப்படி அவசரப்படுத்துகிறீங்க" என கேட்டபோது,

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:17:37 +0530

எதிரி மணி புகார்தாரர் கர்ணனைப் பார்த்து "ஏன்டா பள்ளப்பயலே எங்கிருந்து வந்து பைக்கை நடுநோட்டில் நிப்பாட்டி இருக்க" என்று சொல்லி, எதிரி தனது கையால் புகார்தாரரின் சாதிப் பெயரைச் சொல்லி திட்டி முதுகில் அடித்து சாதாரணக் காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், எனவே இதச பிரிவு 323 மற்றும் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு சட்டம் பிரிவு 3(1)(r), 3(1)(s)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தைப் புரிந்துள்ளார் என இவ்வழக்கு புலன் விசாரணை மேற்கொண்ட புலன் விசாரணை இறுதி அறிக்கையில் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு அரசு தரப்பு தனது வழக்கை நிரூபணம் செய்ய இந்நீதிமன்றம் உத்தரவிட்டது அதனடிப்படையில், புகார் கொடுத்த புகார்தாரர் கர்ணன் என்பவரை அ.சா.1 ஆகவும், அவர் மூலம் புகார் மனு அ.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறப்படும் சாட்சிகளான சிவனாண்டி அ.சா.2 ஆகவும், சக்திவேல் அ.சா.3 ஆகவும், மற்றொரு சாட்சியான முத்துப்பாண்டி விசாரிக்கப்படவில்லை. புலன்விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தபோது அதற்கு சாட்சியாக கையெழுத்திட்டதாக கூறப்படும் சாட்சிகளில் ஒருவரான கோவிந்தராஜ் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பார்வை மகசரில் அ.சா.4–ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மற்றொரு சாட்சியான திருமூர்த்தி விசாரிக்கப்படவில்லை. சம்பவம் பற்றி தெரிந்துகொண்டதாகச் சொல்லப்படும் அ.சா.1–ன் சகோதரி கவிதா அ.சா.5 ஆகவும், சகோதரர் பிச்சைப்பாண்டி அ.சா.6 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்.

**11.** அ.சா.1 கர்ணன் கொடுத்த புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்த இளஞ்செம்பூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.பாண்டி அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கை புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த முதுகுளத்தூர் உட்கோட்ட

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:17:42 +0530

காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.சின்னக்கண்ணு அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை, பார்வைமகசர், வரைபடம், சாதி குறித்த அறிக்கை, எதிரி நீக்கல் அறிக்கை ஆகியவைகள் முறையே அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இதர சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

**12.** இவ்வழக்கின் விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில் புகார்தாரருக்கு முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் பணிபுரிந்த மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்துள்ளார். அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள காயச்சான்றிதழை பரிசீலிக்கையில் அ.சா.1 கர்ணன் மதுபோதையில் இருந்ததாக மருத்துவர் குறிப்பிட்டுள்ளார். அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ள புலன்விசாரணை அதிகாரி மூலம் அ.சா.1–ன் மீதும், அ.சா.1–ன் சகோதரர் பிச்சைப்பாண்டி மற்றும் பலர் மீதும் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையைப் பரிசீலிக்கையில் 1ம் எதிரி அ.சா.1 கர்ணன் குடிபோதையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். 1ம் எதிரி தனது புகாரில் குறிப்பிட்டுள்ளதை உறுதிப்படுத்தும் விதமாக புலன்விசாரணை அதிகாரியால் குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.1 கர்ணனுக்குரிய விபத்து பதிவேட்டு அறிக்கையே உறுதிப்படுத்துகிறது. மேலும், புலன்விசாரணை அதிகாரி சம்பவத்தில் எதிரி, எதிரியின் மனைவி மற்றும் மகன் ஆகியோர்கள் ஈடுபடவில்லை என அவர்களை நீக்கம் செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறப்படும் சாட்சிகளான சிவணாண்டி (அ.சா.2) மற்றும் சக்திவேல் (அ.சா.3) ஏற்கனவே புலன்விசாரணை அதிகாரியிடம் கொடுத்த வாக்குமூலத்தை உறுதிப்படுத்தியும் ஒத்துரைத்தும் சாட்சியம் அளிக்கவில்லை.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:17:47 +0530

**13.** அ.சா.5 கவிதா, அ.சா.6 பிச்சைப்பாண்டி ஆகிய சாட்சிகளின் சாட்சியங்களைப் பரிசீலிக்கும்போது அவர்கள் சம்பவத்தில் அ.சா.1–ன் மூலம் சம்பவத்தைக் கேள்விபட்ட சாட்சிகள். அ.சா.1–ன் சாட்சியத்தின் அடிப்படையில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என இந்நீதிமன்றம் பரிசீலிக்கும்போது, அ.சா.1 தனது புகாரில் சிவனாண்டி(அ.சா.2) என்பவரும், முத்துப்பாண்டி என்பவரும் விலக்கி விட்டதாக தெரிவித்துள்ளார். அதேபோல் இந்நீதிமன்றத்திலும் தெரிவித்துள்ளார். ஆனால், மேற்படி முத்துப்பாண்டி என்பவர் இந்நீதிமன்றத்தில் ஒரு சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேலும், புலன்விசாரணை அதிகாரி 1ம் எதிரி அ.சா.1 மீது புகார் கொடுத்த பிறகுதான், அ.சா.1 எதிரி மீது புகார் கொடுத்துள்ளார் என்பதை தனது குறுக்குவிசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். அ.சா.1 கர்ணன் கொடுத்த புகாருக்கு புகார் ஏற்பு மனு ரசீதும், எதிரி கொடுத்த புகாருக்கு புகார் ஏற்பு மனு ரசீதும் கொடுக்கப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த புகார் மனுவுக்கு வழங்கப்பட்டுள்ள புகார் ஏற்பு மனு ரசீது எண்.61/2022ம், அ.சா.1 கர்ணன் கொடுத்த புகார் ஏற்பு மனு எண்.62/2022 என்பதையும் புலன்விசாரணை அதிகாரி ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் புகார் மனுவில் எதிரி சாதியின் பெயரைச் சொல்லி கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும், அவரது மனைவி மற்றும் மகன் திருமுருகன் ஆகியோர் "பள்ளப்பயலே இங்கே எதுக்குடா வந்தீங்க" என திட்டி, கீழே தள்ளிவிட்டு அடித்துவிட்டதாகவும் கூறியுள்ளதை உறுதிப்படுத்தும் வகையில் சாட்சியம் அளித்துள்ளபோதிலும், இவ்வழக்கும் சம்பவம் எதிரிகள் குடும்பத்திற்கும், அ.சா.1–க்கும் எதிரியின் வீட்டு முன்பு ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக நடந்துள்ளது என்பதை உறுதிப்படுத்த முடிகிறது.

**14.** இருதரப்பிலும் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டபோதிலும், யார் வழக்கு சம்பவத்திற்கு மூலக்காரணம் என்பதை புலன்விசாரணை அதிகாரி கண்டறிந்து காவல்நிலைய ஆணை விதி 585–ன்படி

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:17:51 +0530

இரண்டு வழக்குகளை ஒன்றாக விசாரித்து குற்ற இறுதி அறிக்கை ஏதாவது ஒரு புகாரில் தாக்கல் செய்யவில்லை என்பதிலிருந்தும், புலன்விசாரணை அதிகாரி எதிரியின் மனைவி மற்றும் மகன் சம்பவத்தில் ஈடுபடவில்லை என அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதிலிருந்தும் அ.சா.1 கர்ணன் சம்பவத்தின்போது மதுபோதையில் இருந்துள்ளார் என்பதையும், கருத்திற்கொண்டு பரிசீலிக்கும்போது அ.சா.1ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் வகையில் சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறப்படும் சாட்சிகளின் சாட்சியங்கள் இல்லை என்பதால் அரசு தரப்பு எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15.** சம்பவ சாட்சிகள் அ.சா.1ன் சாட்சியத்தை ஆதரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலேயே அ.சா.1–ன் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வர முடியுமா என்பதை கருத்திற்கொண்டு பரிசீலிக்கும்போது அ.சா.1 சம்பவ சமயம் மதுபோதையில் இருந்துள்ளார் என்பதை அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிருந்து அறிய முடிகிறது என்பதால் அ.சா.1 கர்ணனின் சாட்சியத்திற்கு இந்நீதிமன்றம் முக்கியத்துவம் கொடுக்க இயலவில்லை. அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டது என்ற முடிவுக்கு வருவதற்கு எவ்வித தயக்கமும் இடர்பாடும் இந்நீதிமன்றத்தில் எழவில்லை. அரசு தரப்பு எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கவேண்டியது நியாயமாகவும் அவசியமாகவும் இருக்கிறது.

**16.** எனவே, இவ்வழக்கின் எழுந்துள்ள முரண்பாடுகள் மற்றும் சந்தேகங்களையும் அரசு தரப்பு விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களையும் பரிசீலிக்கும்போது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் வகையில் இல்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:17:56 +0530

வழங்கி எதிரி மீது இதச பிரிவு 323 உ/இ பட்டிலியனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015, பிரிவு 3(2)(va) மற்றும் பிரிவு 3(1)(r)(s) பட்டிலியனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகமற விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**17.** இறுதியாக, எதிரி மீது இதச பிரிவு 323 உ/இ பட்டிலியனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015, பிரிவு 3(2)(va) மற்றும் பிரிவு 3(1)(r)(s) பட்டிலியனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015–ன் கீழ் இவ்வழக்கில் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே மேற்படி எதிரியைக் குவிமுச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரங்களை ரத்து செய்தும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாளாகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:18:03 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட சிறப்பு நீதிமன்றம்,
இராமநாதபுரம் (மு.கூ.பொ.)

**அரசு தரப்பு சாட்சிகள் :**

அ.சா.1 திரு.கர்ணன்

TNRM110002072023



அ.சா.2 திரு.சிவனான்டி

அ.சா.3 திரு.சக்திவேல்

அ.சா.4 திரு.கோவிந்தராஜ்

அ.சா.5 திருமதி.கவிதா

அ.சா.6 திரு.பிச்சைப்பாண்டி

அ.சா.7 திரு.பாண்டி, சிறப்பு சார்பு ஆய்வாளர்

அ.சா.8 திரு.சின்னக்கண்ணு, காவல் துணைக் கண்காணிப்பாளர்

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 16.12.2022 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 17.12.2022 | பார்வை மகசரில் அ.சா.4–ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 17.12.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 17.12.2022 | காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை |
| அ.சா.ஆ.5 | 17.12.2022 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 17.12.2022 | வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 29.12.2022 | சாதி குறித்த அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 27.01.2023 | எதிரி நீக்கல் அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 16.12.2022 | காயச்சான்று |

**சான்று பொருள் :** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் :** இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணம்:**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.1 | 17.12.2022 | முதல் தகவல் அறிக்கை |

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.17 18:18:10 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட சிறப்பு நீதிமன்றம்,
இராமநாதபுரம் (மு.கூ.பொ.)